# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 06 | செயன்முறை தொழில்நுட்ப திறன்–I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி-I

- **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**


01. எமது சுற்றுப்புற சூழலைக் கவர்ச்சிகரமாகப் பேணுவதன் மூலம் பெறக்கூடிய நன்மைகளில் ஒன்று
    1. கவலை 2. கோபம் 3. மகிழ்ச்சி 4. வெறுப்பு

02. மூலிகைப் பயிர் தொகுதிக்குள் உள்ளடங்குபவை
    1. வெண்டி, கோவா, கத்தரி 2. பாற்கிழங்கு, சேம்பு, கொடிக்கிழங்கு
    3. பாவட்டை, கற்றாளை, திப்பிலி 4. மிளகு, இஞ்சி, மிளகாய்


03. தொங்கும் தாவரங்களுக்கு உதாரணம்,
    1. கொடிரோசா, மணிவாழை 2. சைபிரஸ், இக்லோரா
    3. மொண்டரிப்சூ, ஸ்பைடர்பிளான்ட் 4. இழிசாந்திமம், ஜெர்பரா

04. பின்வருவனவற்றுள் சுவையூட்டி பயிராக அமைவது,
    1. மிளகு 2. பாவட்டை 3. கொடிக்கிழங்கு 4. குரக்கன்

05. அரிசிமா, பாண் போன்றவற்றில் அடங்கும் பிரதான போசணைக் கூறு,
    1. புரதம் 2. காபோவைதரேற் 3. கனியுப்பு 4. விற்றமின்

06. சமையலறைக்கான தளத்திட்டம் ஒன்றில்  எனும் குறியீடு குறிப்பது
    1. சமையலறை சுவர் 2. சமையலறை யன்னல்
    3. உணவு சமைக்கும் அலகு 4. உணவுக் களஞ்சியம்

07. கையால் துளையிடும் கருவியாக அமைவது
    1. சுட்டியல் 2. குறடு 3. அரம் 4. துறப்பணம்

08. அருகில் தரப்பட்டுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள பொருள் எது?
    
    1. கவர் சுத்தியல் 2. துறப்பணம்
    3. சீவுளி 4. தட்டுப்பொல்லு

09. ஸ்டென்சில் முறை அச்சு பதித்தல் பாவிக்கப்படும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
    1. உடை 2. போஸ்டர் 3. பெனர் 4. மேற்கூறிய யாவும்

10. கணினியில் வரைந்த படம் ஒன்றை சேமிப்பதற்கு பயன்படுத்தப்படும் கட்டளை,
    1. New 2. Open 3. Save 4. Cut (10×2=20புள்ளி)



kalvi.lk

➢ **பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.**

(பொலித்தீன், வெண்டி, மிளகு, சீவுளி, ஈஸ்ட், பற்றீரியா)

11. சுவைச் சரக்குகளில் ஒன்று ........................................... ஆகும்.

12. பலகைகளை மட்டப்படுத்துவதற்கு ........................................... பாவிக்கப்படுகிறது.

13. சிதைவடையாத கழிவுப் பொருள் ........................................... ஆகும்.

14. நேரடியாக பாத்திகளில் வித்துகளாக நடக்கூடிய பயிர் வகைகளுள் ஒன்று ................................ ஆகும்.

15. நொதிக்கச் செய்யும் பொருள் ........................................... ஆகும்.

(5×1=5 புள்ளிகள்)

➢ **சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளம் இடுக.**

16. மண்புழு மண்ணை தூர்வையாக்கும். ( )

17. மீன் தகரத்தில் அடைத்து பொதி செய்யும் உணவாகும். ( )

18. அரச வைத்தியசாலை இலாபநோக்க நிறுவனமாகும். ( )

19. சுயதொழில் ஒன்றைச் செய்வதால் மனிதனுக்கு சுய திருப்தி ஏற்படும். ( )

20. முறைசார்ந்த வடிவங்களுள் இலை வடிவம் ஒன்றாகும். ( )

(5×1=5 புள்ளிகள்)



kalvi.lk

## **பகுதி-II**

- **விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**
- **(பட விளக்கம் எதிர்பார்க்கப்படும்)**

01. 1) வீட்டுத் தோட்டத்தில் தாவரங்களை வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் பண்புகள் 2தருக.
    2) கீரை வகைகள் 3 தருக?
    3) வெளிவரும் நாற்றம் காரணமாக பூச்சிகளை விரட்டும் தாவரங்கள் 3தருக.
    4) உயிரற்ற மூடுபடைகள் எவை? (2+3+3+2=10 புள்ளிகள்)

02. 1) சுட்டித் துண்டு ஒன்றில் உள்ளடக்க வேண்டிய அம்சங்கள் யாவை?
    2) போசணைக் கூறுகள் யாவை?
    3) நாம் உணவை உட்கொள்ள வேண்டிய அவசியம் யாது? (3+3+4=10 புள்ளிகள்)

03) 1) இரு பரிமாணத் தோற்றம் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
    2) முப்பரிமாண தோற்றம் உடைய பொருட்கள் 3தருக?
    3) கணினி திரையில் Home மெனுவில் உள்ள பின்வரும்
    Copy - தொழிற்பாடு யாது?
    Cut - தொழிற்பாடு யாது?

04) 1) குண்டூசி தாங்கி செய்வதற்குத் தேவையான பொருட்கள் யாவை?
    2) குண்டூசி தாங்கியின் மாதிரிப் படத்தை வரைந்து அளவுகள், உபகரணப் பொருட்களை குறித்துக் காட்டுக.
    3) படத்தை வரைந்து காட்டுக.

    அ) கைவாள்
    ஆ) கவர் சுத்தியல்
    இ) கைக்குறடு
    ஈ) மரவேலை உளி

(2+4+4=10 புள்ளிகள்)

05) 1) அடிப்படைத் தேவைகள் யாவை?
    2) தேவைகளிற்கும் விருப்பங்களிற்கும் இடையிலான வேறுபாடுகள் 2 தருக.
    3) சேவைகள் நான்கு தருக. (2+4+4=10 புள்ளிகள்)


kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page